# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வெள்ளிக்கிழமை 01.11.2024 supeedsam.com supeedsam@gmail.com





# ரவிராஜ் – தென்மராட்சி மக்களைக் கௌரவப்படுத்தவே சசிகலாவுக்கு ரெலோ ஆசனம் வழங்கியது

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜ் சையும் தென்மராட்சி மக்களையும் கௌரவப்படுத்தவே சசிகலாவுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ) ஆசனம் வழங்கியது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளரும் வேட்பாளருமான குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை பகுதியில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜ் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக செயல்படுவதில் முன் நின்று உழைத்தவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பங்காளி கட்சிகளாக ரெலோ பயணித்த போது எங்கள் கட்சியின் தலைவர் உடன் நெருங்கிய உறவை பேணியதுடன் தமிழ் மக்கள் சார்ந்து தீர்வு விடயங்களில் நெருக்கமாக செயல்பட்டவர்.

அவ்வாறான ஒருவரின் மனைவியான சசிகலா ரவி ராஜ் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழரசு கட்சி

02 ஆம் பக்கத்தில்...




# ஒற்றுமையை விரும்பாதவர்களுக்கு மக்கள் பதில்அளிப்பர்



தமிழ்கட்சிகளின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருப்பதை தேர்தலின் பின்னர் பார்க்க முடியும் என்பதுடன், அனுர அரசாங்கமும் சிங்களதேசிய வாதத்தையே பின்தொடர்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வன்னிமாவட்ட ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

(31) வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்

02 ஆம் பக்கத்தில்...







# மாவீரர்கள் நினைவாகவும் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி ஆளுக்கொரு மரம் நடுவோம்



மாவீரர்களைப் போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உலகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில்

02 ஆம் பக்கத்தில்...










## ாவீரர்கள் நினைவாகவும் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி ஆளுக்கொரு மரம் நடுவோம்

**தலையாய பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது.**

**பூமியின் சராசரி வெப்பநிலை ஆண்டுக்கு ஆண்டு எகிறிவருகிறது.**

**காட்டுத்தீயும் வெப்ப அலைகளும் முன்னெப்போதையும்விட மூர்க்கம் கொண்டு பொசுக்கி வருகிறது.**

**இன்னொருபுறம், பருவம் தப்பிக் கடும் மழை கொட்டுகிறது.**

**வருடாந்த மழை வீழ்ச்சி ஓரிரு நாட்களிலேயே பேய்மழையாகப் பொழிகிறது. இவை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கிலும் மண்சரிவிலும் சிக்கி உலகம் பூராவும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி வருகிறார்கள்.**

துருவப் பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து செல்கிறது. இதனால்; உலகநாடுகள் பலவற்றின் கரையோரங்களைக் கடல்நீர் விழுங்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

கடல் மட்ட உயர்வால் யாழ். குடாநாடு ஆனையிறவுப்பகுதியில் கடலால் துண்டிக்கப்பட்டுத் தனித் தீவாக உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அவலங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக்கில்லாமல் நாம் அழித்துத் தள்ளுவதே அடிப்படைக் காரணமாகும்.

பூமி சூடாகிவருவதன் எதிர்விளைவுகளாகக் கடும் வறட்சி ஏற்பட்டுத் குடிநீருக்காக நெடுந்தொலைவு அலையவேண்டி ஏற்படும். பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து உணவுப் பாதுகாப்புக் கேள்விக்குறியாகும். கால்நடை வளர்ப்பைக் கைவிடவேண்டி ஏற்படும். வளியில் மாசுகள் அதிகரித்துச் சுவாசநோய்களால் மூச்சுத்திணற வேண்டி ஏற்படும்.

மனஅழுத்தம் ஏற்பட்டுத் தற்கொலை உணர்வு தூண்டப்படும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே நாம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும்.

அந்தவகையில், போரின் முற்றுகைக்குள்ளும் இயற்கை எனது நண்பன் என்று சொல்லி சூழல் நல்லாட்சி ஆணையம், வனவளப் பாதுகாப்புப்பிரிவு என்பனவற்றை உருவாக்கி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள்.

மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம்.

இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம்பூமியையும் காப்பாற்றும்.

அந்த வகையில் மாவீரர்களைப் போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## ஒற்றுமையை விரும்பாதவர்களுக்கு மக்கள் பதில்அளிப்பர்

**போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தமிழ்கட்சிகள் ஒற்றுமை தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள ஆதங்கம் உண்மையானது. அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.**

இந்த தேர்தலில் தமிழ்கட்சிகளாகிய நாம் அனைவரும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழே போட்டியிடுவோம் என்று முயற்சிகளை எடுத்திருந்தோம். அது சாத்தியப்படவில்லை. எனவே அது மனவேதனையை அழிக்கிறது. இருப்பினும் நாம் ஐந்து கட்சிகள் தற்போது ஒன்றாக இருக்கிறோம். ஏனையவர்களையும் உள்ளேகொண்டுவருவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் செய்வோம்.

தேர்தலின் பின்னராவது தமிழ்கட்சிகள் இணைந்துசெல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். அத்துடன் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருக்கும். அவ்வாறு மக்கள் பாடம் புகட்டும் போது ஒற்றுமையினை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.எனவே மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படுபவர்களைஅவர்களே பார்த்துக்கொள்வார்கள்.

கடந்த அரசாங்கத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கமும் புதிய ஜனாதிபதியும் அது தொடர்பான கருத்துக்களை கூற மறுக்கின்றனர். எனவே அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்படவுள்ளதாக சொல்லப்பட்ட ஊதியம் கூட்டப்படவேண்டும். எமது கட்சி இதற்காக தொடர்ந்தும் குரல்கொடுக்கும்.

பாராளுமன்றத்தேர்தலில் ஆசனங்களை கூடுதலாக எடுக்கவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டே ஊழல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என அரசால் காட்டப்பட்டுகிறது. அத்துடன் மாகாணசபை முறைமையை ஒழிக்கவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் குரலாக உள்ளது. குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் இவர்களே. ஆனால் அதனை நீக்குவதற்கான சூழலில் அவர்கள் இருப்பதுபோல தெரியவில்லை.

இடதுசாரித்துவத்தினை அடித்தளமாக கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்களதேசியவாதத்தோடு இணைந்து செயற்படுகின்றது. அந்தவகையில் திடமான ஒரு அரசாங்கம் அமைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும்.

எனவே நாம் 11 ஆசனங்களை பெறும் போது அதிகாரம் மிக்கவர்களாக இருப்போம்.இம்முறை தமிழ்த்தரப்பை புறந்தள்ளி புதிய அரசாங்கத்தை அமைக்க முடியாது. அதனை நிர்ணயிக்கின்ற சக்தியாக தமிழ்த் தரப்பு இருக்கும் என்றார்.

## ரவிராஜ் - தென்மராட்சி மக்களைக் கௌரவப்படுத்தவே சசிகலாவுக்கு ரெலோ ஆசனம் வழங்கியது

சார்ந்து வேட்பாளராக களம் இறக்கப்பட்ட நிலையில் அவரின் வெற்றி உறுதியாக இருந்த நிலையில் சதி நடவடிக்கை மூலம் அவரது ஆசனம் பறிக்கப்பட்டது.

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் சசிகலா ரவிராஜ்க்கு தமிழரசு கட்சி ஆசன ஒதுக்கீட்டை வழங்காமல் புறம் தள்ளிய நிலையில் மாமனிதர் ரவிராஜ்சுக்காகவும் அவர் நம்பிக்கை வைத்த தென்மராட்சி மக்களையும் கௌரவப்படுத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் அவரை எம்மோடு இணைத்தோம்.

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ யாழ் தேர்தல் தொகுதியில் ஆசன ஒதுக்கீட்டினை பகிரும் போது போட்டி நிலை உருவாகிய போதும் சசிகலாவுக்கு கட்டாயம் ஆசனத்தை வழங்க வேண்டும் என கட்சி முடிவு செய்து என்னோடு சக வேட்பாளராக களம் இறக்கினோம்.

தமிழ் தேசியத்திற்காக மாமனிதர் ரவிராஜ் செய்த தியாகங்கள் அளப்பரியது அதனை தமிழ் மக்கள் எப்போதும் மறக்கமாட்டார்கள். எமது ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியானது தமிழ் தேசியம் சார்ந்து பயணிக்கின்ற கூட்டணி கட்சிகளில் முதன்மையான கட்சியாகப் பார்க்கப்படுகின்ற நிலையில் அதனைதமிழ் மக்கள்அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும்

ஆகவே மறைந்த மாமனிதரின் தியாகங்களை நெஞ்சில் நிறுத்தி சங்கு சின்னத்தில் போட்டியிடும் எனது இலக்கமான 3 க்கும் பெண் வேட்பாளரான சசிகலாவின் இலக்கம் 7 க்கும் விருப்பு வாக்குகளை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சபையின் மனித உரிமை மீறல்

## நீதிக்கான மய்யம் நடவடிக்கை

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர சபை பொது மக்களுக்கு சேவை வழங்குவதில் வினைத்திறனற்றதாக காணப்படுவது கவலையளிக்கிறது என நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமாணி ஷஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபைக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் மேற்கொண்ட விடயம் தொடர்பிலான விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள அதன் அலுவலகத்தில் இன்று மாலை நடைபெற்ற வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது;

கல்முனை மாநகரசபைக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்றினை நேற்று மேற்கொண்டது. அதில் பிரதானமாக குடி நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடும் நிதிக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை தெளிவுபடுத்துவதற்காக எம்மால் இவ்வழக்கு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. இதன் மூலம் இம்மனித உரிமை மீறல் வழக்கில் மக்களுக்கான ஒரு நீதியை பெற்றுக்கொடுப்பதாகும்.

கல்முனை மாநகர சபை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் புதிய நீர் இணைப்புக்காக மாநகர சபையின் அனுமதி பெற்று தோண்டப்படுகின்ற கொங்கிரீட் உள்ளிட்ட இதர வீதிகள் இன்னும் செப்பனிடப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றன. இவ்விடயத்தை எமது மய்யம் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை கடந்த காலங்களில் அனுப்பி வைத்திருந்தது.



இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினரால் பொறுப்பற்ற வகையில் கண்துடைப்பான பதில் எமக்கு வழங்கப்பட்டது. இதனை எமது மய்யம் ஏற்றுக்கொள்ளாததால் மாநகர சபைக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம். புதிய நீர் மின் இணைப்பினை பெறும் விண்ணப்பதாரர்கள் கல்முனை மாநகர சபைக்கு ஏற்கனவே புதிய நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடுவதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குள் நீர்இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டப்பட்ட வீதிகள் மாநகர சபையினால் செப்பனிடப்படாமல் நெடுங்காலமாக காணப்படுகின்றது.

இது மாநகரசபை கட்டளைசட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படிஇ வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகரசபையின் அடிப்படைப் பொறுப்புகளாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது மாநகரசபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்குட்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நீதிக்கான மய்யம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தோண்டப்பட்ட வீதிகளை செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததோடு மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அன்றே தெரிவித்திருந்தோம். மேலும் அரசு நிறுவனம் ஒன்றுக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதானது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும்.

குறித்த விசேட செய்தியாளர் சந்திப்பில் மய்யத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் பிரதித் தலைவர் யூ.கே.எம்.றின்சான் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

# 20 வருடங்கள் எனக்கு வேண்டாம் ஒரேயொரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள்

### மக்களிடத்தில் சிராஸ் மீராசாஹிப் வேண்டுகோள்!





**(அபு அலா )**

கல்முனை மாநகரசபையின் முதல்வராக இருந்த காலத்தில் எமது சபையை ஒரு ஊழல்களற்ற மாநகர சபையாகவும், நாட்டிலுள்ள சபைகளைவிட சிறந்தொரு சபையாக மாற்றியமைத்த பெருமை எனக்கும், உங்களுக்கும் உள்ளது என்று, கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 3 ஆம் இலக்க வேட்பாளரும் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது பொதுத்தேர்தல் காரியாலய திறப்பு விழா கட்சியின் 3 ஆம் இலக்க வேட்பாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் (30) திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நீங்கள் தந்த அமானிதத்தின் மூலம் எனக்குக் கிடைத்த முதல்வர் பதவியின் ஊடாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உதவிகளைப் பெற்றுக்கொண்டு கல்முனை மாநகரத்தை பல்வேறுபட்ட அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றதை நீங்கள் அறிவீர்கள்.

இன மத வேறுபாடின்றி வாழ்வாதார உதவிகள், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள், திண்மக் கழிவகற்றல் முறையில் எவ்வித தடைகளுமின்றிய நடைமுறை போன்ற பல்வேறுபட்ட விடயங்களைச் செய்ய ஒரு பம்பரம் 
போன்று இயங்கி வந்ததையும் கண்ணூடாகக் கண்டீர்கள்.

எனது இந்த சேவையை அம்பாறை மாவட்டத்திலுள்ள எல்லா மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற சிந்தனையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், அதன் தலைமையும் முடிவெடுத்து இத்தேர்தலில் என்னை களம் இறக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து இன மக்களுக்கும் இன மத வேறுபாடின்றிய சேவைகளை வழங்கி வைக்க ஒரேயொரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள் என்று நான் கேட்கிறேன். எனக்கு 20 வருடங்கள் வேண்டாம். எனது செயற்பாடுகளையும், வேலைத் திட்டங்களையும் நீங்கள் அவதானித்து அதன் பின்னர் முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இந்த தேர்தலில் காரியாலய திறப்பு விழாவில் உலமாக்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், கட்சிப் போராளிகளென பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் வெளியாகும்

### ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள்

கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிடப்பட உள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (Scarborough Recreation Centre, 3600 Kingston Rd, Scarborough, ON M1M 1R9)

3ம் திகதி நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 1600 முதல் 1900 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.




இந்நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்கள் வழங்குவார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ் பெற்ற வானொலி அறிவிப்பாளர் திரு. இளங்குமரன், கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் திரு. கா. யோ. கிரிதரன், மற்றும் எழுத்தாளர் திருமதி. சிறி ரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் திரு. திரு. லெனி மரியதாஸ் அவர்கள் நிகழ்த்துவார்.

அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் திரு. மீரா பாரதி அவர்கள் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் திரு. அகனி சுரேஷ் அவர்கள் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும், நூலாசிரியரின் ஊடக - எழுத்து பற்றி உலகத்தமிழர் ஆசிரியர் திரு. கமல் நவரட்ணம் அவர்கள் வழங்குவார். கனடாவில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் கல்முனையில் விளையாட்டு திருவிழா !

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**





மாணவர்களிடத்தில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) ஏற்பாட்டிலும் டயக்கோனியா (Diakonia) அமைப்பின் ஆதரவிலும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு திருவிழா கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் (30) ஆரம்பமானது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர்.இஸ்ஸதீன் கலந்து கொண்டதோடு கௌரவ அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் அவர்களும் விசேட அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ் அவர்களும் மற்றும் இந்நிகழ்வுக்கு பொறுப்பான முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் (MWRAF) நிறைவேற்று பணிப்பாளர் எயன் ஜப்பார், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் லைலா உடையார், நிதி உத்தியோகத்தர் குமுது பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளின் அதிபர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் பலர் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டனர். இவ் விளையாட்டு திருவிழாவில் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர். இஸ்ஸதீன் அவர்களை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் வந்திருந்த அதிதிகள் அனைவரும் இணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை பாடசாலைகள் சாதனை !





**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

கிழக்கின் அம்பாறை மாவட்டத்தின் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியானது 125ஆவது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றிகள் பலவற்றை குவித்துக் கொண்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக கடந்த செவ்வாய்க் கிழமை (29) கல்முனை வலய மட்டத்தில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண் மற்றும் பெண் மாணவ மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை கல்வி வலய கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி (தேசிய பாடசாலை) முதலாம் மற்றும். இரண்டாம் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியானது கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் அவர்களின் தலைமையில் சிறப்பாக ஒழுகுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பலத்த போட்டிகளின் மத்தியில் இதில் பங்குபற்றிய ஆண் மாணவ மேலைத்தேய இசை குழுவானது முதலாம் இடத்தையும், பெண் மாணவ மேலைத்தேய இசை குழுவானது இரன்டாமிடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளது. இவ் மாணவர்களை ஊக்குவித்த அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ. ரெஜினோல்ட் அவர்களுக்கும், பெண் மாணவிகளின் மேலைத்தேய இசை குழுவுக்கு பொறுப்பாகவும் வழிகாட்டியாகவும் உள்ள பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தி அவர்களுக்கும், பொறுப்பாசிரியரான திருமதி எஸ். சுரேஷ் அவர்களுக்கும் ஆண் மாணவர்களின் மேலைத்தேய வாத்திய இசை குழுவுக்கு பொறுப்பாக உள்ள அருட்சகோதரர் ஏ. தேவராஜா அவர்களுக்கும், பயிற்றுவிப்பாளரான எஸ். நிர்மல் ராஜா அவர்களுக்கும் மற்றும் உதவிகளை புரிந்த பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் தற்போது பிரத்தியேக வகுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பெற்றோர் மத்தியில் கல்வி மாத்திரம் அல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தமது பிள்ளைகளை பங்கு பற்ற ஊக்குவிப்பளித்த பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்து கொண்டுள்ளது.

இப்போட்டியின் மூன்றாம் இடத்தை கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் தனதாக்கி கொண்டது.

# அம்பாறை கரையோர பிரதேசங்களில் திருட்டு சம்பவங்கள்!
## பொலிஸாரின் அவசர அறிவித்தல்

**(வி.ரிசகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் அண்மைக்காலமாக திருட்டு கொள்ளை பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை, உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக வீரமுனை ,மருதமுனை, மண்டூர் , பகுதிகளிலும் அதிகளவான வீடு உடைத்து நகை ,பணம் திருடுதல் மற்றும் மோட்டார் சைக்கிள் காணாமல் சென்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குறித்த சட்டவிரோத சம்பவங்களில் வீடுகள் உடைத்து திருடும் சம்பவம் இரவு 1:00 மணிக்கும் அதிகாலை 4:30 மணிக்கும் இடையில் இடம்பெற்று வருவதுடன் வீட்டின் ஜன்னல் கிறில் மற்றும் ஓடுகள் பிரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இடம் பெறுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தவிர மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் சம காலங்களில் பல்வேறு பொலிஸ் நிலைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் தரித்து வைக்கப்பட்ட நிலையிலும் வயல் வேலை காரணமாக வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டியில் வைத்து விட்டு செல்லும் பொருட்கள் உள்ளிட்டவைகள் திருடப்பட்டு வருகின்றன.

மேலும் சில பொலிஸ் பிரிவுகளில் வைத்தியசாலை, பொதுச்சந்தை, நகரப் பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளமை சிசிடிவி காணொளிகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனவே இரவு நேரத்தில் வீட்டின் மறைவான இடங்களை பரீட்சித்து பெறுமதியான பொருட்களை பொதுமக்கள் பாதுகாப்பதுடன் , வீட்டின் ஜன்னலுக்காக பொருத்தப்படும் கிறிலை உறுதியான வகையில் பொருத்தி கொள்ளுமாறும் , சீலிங் பேன் பயன்படுத்தும் வீடுகளில் அதிக திருட்டுகள் இடம்பெறுவதனால் அதிக சத்தம் இடும் இவ்வாறான மின் விசிறிகளை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அத்துடன் பகல் நேரத்திலோ, இரவு நேரத்திலோ தேவையற்ற முறையில் சந்தேகத்திற்கிடமாக மாஸ்க் மற்றும் தொப்பி அல்லது தலைக்கவசம் அணிந்து நடமாடுபவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தமாக அவதானமாக இருப்பதுடன் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் ஏதேனும் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தெரியப்படுத்தமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் இடம் பெற்ற அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம்!!



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பில் இடம் பெற்ற அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டத்தில்

வட கீழ் பருவ பெயர்ச்சி மழைக்கான தயார்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (30) திகதி நடைபெற்றது .

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் ஏ.எஸ் எம்.சியாத் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவ பெயர்ச்சி மழைக்கான தயார்படுத்தல் நடவடிக்கையாக மாவட்ட மட்டத்தில் ,அனர்த்தத்திற்கு தயார்படுத்தல் மற்றும் அனர்த்த முன்னெச்சரிக்கை போன்ற பணிகளுக்கான முன்னாயத்த நடவடிக்கை தொடர்பாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது

இந் நிகழ்வில் மத்திய நீர்ப்பாசன திணைக்கள பெறியியலாளர் எம்.ஐ.எம். இப்றாகிம், இலங்கை மின்சாரசபையின் உயரதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மீன்பிடி, விவசாய நீர்ப்பாசன திணைக்களங்களின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேசசபைகளின் பிரதிநிதிகள், முப்படையினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.



# மட்டக்களப்பில் நவீன மயப்படுத்தப்பட்ட சதோச நிறுவனம் திறந்து வைப்பு!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நவீன மயப்படுத்தப்பட்ட சதோச நிறுவனம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலகுவாகவும், மலிவாகவும் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வகையில் மட்டக்களப்பு களியங்காடு பகுதியில் திறந்து வைக்கப்பட்ட சத்தோச நிலையமே இவ்வாறு நவீன மயப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரை அண்டிய மக்கள் அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்து கொள்ளும் வகையில் நவீனமயப்படுத்தப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட கள்ளியங்காடு சத்தோச நிறுவனத்தினை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

சதோச நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு முகாமையாளர் இசான் கொடகம, மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் சுகத்குமாரசிறி மற்றும் மதத் தலைவர்கள், சதோச நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.